**தலைப்பு - 194 - இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 நவம்பர் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தி இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1.2 | மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கான கடன் நிலுவை மொத்தம் மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம் கடன் நிலுவை ரூபா 96,404,732 என்பதுடன் அது திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 96,580,230 என்பதால் அமைச்சு மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 175,498 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு திருத்தப்படல் வேண்டும். |
| 1.6.1.3 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 10,849,275 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 6,365,092 ஆன வைப்புக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சிற்கு உரித்தான இரு பிரிவுகளான தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய மத்திய நிலையத்திலிருந்து அம்பாந்தோட்டை சிறுவணிகப் பிரிவிற்கு 2020 யூன் 09 இல் இடம்மாற்றலாகிச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 109,900 இடர்கடன் மிகுதி முற்பணக் கணக்கில் சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் அறவிட வேண்டிய தனிப்பட்ட கடன் மிகுதி பட்டியலில் மற்றும் இட மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மிகுதியின் கீழ் காட்டப்பட்டிருந்தமையர்ல் அந்த அளவினால் கணக்கின் அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதி கூட்டிக்காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட அமைச்சுடன் பேசி திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) வாடகை மற்றும் வேலைகளுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் 250/2016 (1) ஆன மற்றும் 2016 ஆகஸ்ட் மாதம் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்கள் வழங்கப்படும் போது ஒவ்வொரு முற்பணங்களுக்காகவும் வாடகை | தனித்தனி கணக்கீடு இலக்கங்களைப் பெற்று முற்பணங்கள் கணக்குகளில் எடுக்கப்படுவதில்லை எதிர்காலத்தில் | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் முற்பணங்கள் சரியாகக் கணக்கிடப்படல் |

| | | |
|---|---|---|
| மற்றும் வேலைகள் முற்பணக் கணக்கு மற்றும் வேலைகள் முற்பணங்கள் திரண்ட கணக்கின் கீழ் வேறாக கணக்கு இலக்கமொன்று அரச கணக்குகள் திணைக்களத்திடம் பெறப்பட வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டமொன்றுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 16,633,602 ஆன வேலை தொடங்குவதற்கான முற்பணம் கணக்கில் எடுக்கப்படாததுடன் முற்பணத் தொகையில் 2020 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய ரூபா 15,503,089 ஆன பெறுமதியும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இக்குறைபாடு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

2. **நிதிசார் மீளாய்வு**

2.1 **செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த மூலதன ஒதுக்கங்கள் ரூபா 2,464,242,000 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா 1,506,877,006 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய மூலதன ஒதுக்கங்கள் ரூபா 957,364,994 அதாவது நூற்றுக்கு 39 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் ஊரடங்குச் சட்டம் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக மூலதனச் செயற்திட்டங்கள் சரியாக செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. | செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொடங்கும் நேரத்தை தீர்மானித்தல் மற்றும் வருடத்தில் நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளின் அளவிற்கேற்ப ஒதுக்கங்கள் ஒதுக்கப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வழிகாட்டி இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களுக்கும் வெளியிடப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டிய போதிலும் குறிப்பு இலக்கம் iii இன் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று மற்றும் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கு இடையே 65 செலவுத் தலைப்புக்களுக்காக ரூபா 732,021,009 அதிகமாகவும் மற்றும் ரூபா 128,709,510 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத் தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம; 02/2020 இன் 10.1 பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வழிகாட்டி இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அறிக்கையிடப்படாத எவ்வித கடப்பாடுகளோ அல்லது பொறுப்பொன்று முன்னைய வருடத்தின் செலவாக 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட முடியாதென்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2020 ஆம் ஆண்டின் செலவாக அறிக்கையிடப்படாத ரூபா 368,912 ஆனது 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பற்றுச்சீட்டுக்கள் தாமதமாகக் கிடைத்தமை மற்றும் திசெம்பர் மேலதிக நேரம் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக திசெம்பர் 31 வரையில் சரியாக மதிப்பிடுவது கடினமாக இருந்தது. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தி னால் வெளியிடப் பட்டிருந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 இன் முற்பணம் ''பீ'' கணக்கின் பிரகாரம் அறவிட வேண்டிய நிலுவைகள் காணப்பட்ட 08 உத்தியோகத்தர்களின் மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 916,296 என்பதுடன் அவற்றில் வருடம் 01 இற்கு குறைவான மிகுதிகளின் மொத்தம் ரூபா 495,704 மற்றும் 01 வருடம் மற்றும் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 420,592 ஆகும். | அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மிகுதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இரு உத்தியோகத்தர்களின் 2018 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 336,480 ஆன கடன் மிகுதி கணக்காய்வுத் தினம் (2021 ஏப்ரல் 01) வரையில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடன் அறவிடப்படாமையால் ரூபா 44,751 ஆன வட்டித் தொகையொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்க முடிந்தது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர் களின் கடன் மிகுதியை சரியாக அறவிடுதல் வேண்டும். |

**2.4 வைப்பு மிகுதிகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடங்கள் 02 தொடக்கம் 05 வரையான பழைய 34 வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 16,183,793 தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் விடுவிப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முன்னைய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.5 வங்கி கணக்குகள் செயற்பாடு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கணக்கு இலக்கம் 7040742** | | |
| வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 214,718 பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பாக நி.பி 396(ஈ) பிரகாரம் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **நுவரெலியா அதியுயர் விளையாட்டுத் தொகுதி நிர்மாணம்**<br>கடல் மட்டத்திலிருந்து 1895 மீட்டர் உயர்த்தில் அமைந்துள்ள நுவரெலியா நகரத்தில் விளையாட்டு அமைச்சிற்கு உரித்தான 34.5 ஹெக்டயர் காணியில் விளையாட்டுப் பயிற்சிகளை பெறுகின்ற விளையாட்டு வீரர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்கில் நிர்மாணத்திற்கு முன்மொழியப்பட்ட உயர் விளையாட்டுத்தொகுதி நிர்மாணச் செயற்திட்டம் 03 வருடங்களுக்குள் செயற்படுத்தப்படுவதற்கு அதன் ஒப்பந்தப் பெறுமதி யூரோ 75,528,700 ஆன கிரயத்தில் நூற்றுக்கு 70 வீதம் ஐக்கிய இராச்சிய ஏற்றுமதி சந்தை மூலமும் மிகுதி நூற்றுக்கு 30 வீதம் மக்கள் வங்கி மூலமும் வழங்குவதற்காக கடன் ஒப்பந்தம் திட்டப்பணமானது யூரோ 264,492.34 அதாவது ரூபா 51,047,021 ஆனது கடன் வசதிகள் வழங்கப்படுகின்ற வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் மொத்தச் செலவு ரூபா 53,551,631 என்பதுடன் 2019 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் இச்செயற்திட்டம் பொதுமக்களுக்காத் திறக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் இச்செயற்திட்டம் 2020 இல் இடைநிறுத்தப்பட்டதனால் செயற்திட்டத்திற்காக | இச்செயற்திட்டம் இச்சந்தர்ப்பத்தில் விளையாட்டுத் துறையில் முன்னுரிமையான செயற்திட்டமொன்று அல்ல என்று இந்த அமைச்சினால் இனங்காணப்பட்டதால் செயற்திட்டத்தினை இரத்துச் செய்வது பொருத்தமானதென்று அமைச்சு பரிந்துரை இலக்கம் MOYS/PLN/05/04 மற்றும் 2021.02.08 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவை பத்திரத்திற்குரிய இலக்கம் அமப/21/0242/329/001 மற்றும் 2021/02/22 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நுவரெலியா அதியுயர் விளையாட்டுத் தொகுதி நிர்மாணத்திற்காக குறித்த நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட மதியுரை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கும் மக்கள் வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட கடன் ஒப்பந்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அந்த ஒப்பந்தமிடப்பட்ட கடன் | விளையாட்டு வீரர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான பயிற்சி நடவடிக்கைகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு போதியளவு நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் செயற்திட்டம் விரைவில் செயற்படுத்தப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்கு முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்ட மொத்தச் செலவானது விளைவற்ற செவொன்றாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தொகை பொருத்தமான வேறு அபிவிருத்திச் செயற்திட்டமொன்றாக ஈடுபடுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கும் இக்கடன் ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை முடிவடைந்ததில் சேவைக் கட்டணம் (கடன் இணக்கக் கட்டணங்கள் உள்ளடங்கலாக) தள்ளுபடி செய்வதற்காக பொது திறைசேரியின் செயலாளருக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அதற்காகத் தேவைக்கான ஒதுக்கங்கள் ஒதுக்கப்படுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. வணிக மற்றும் மதியுரை ஒப்பந்தங்களும் இரத்துச் செய்யப்பட்டன. | |

**3.2 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சினால் அரச நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபா 153,345,000 பெறுமதியான 15 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்ற தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 13 வாகனங்களைக் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. 02 வாகனங்கள் தற்காலிக அடிப்படையில் அவ்வாகனங்களைக் கையளிப்பதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட வாகனங்கள் விரைவில் கையளிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சொத்து முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சினால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 9,100,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவ்வாகனம் அமைச்சிற்கு கையேற்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் வங்கி மூலம் விடுவிக்கப்பட்டு அமைச்சிற்கு வழங்கப்படாமையால் கைறேற்றல் தள்ளிப் போடப்பட்டுள்ளது. | வெளியார் நிறுவனத்திட மிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 அரச உத்தியோகத்தரின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச பணம், வருமான முத்திரை அல்லது உள்ளடக்கங்களைப் பொறுப்பேற்றல் அல்லது வைத்திருத்தல், அரச பணத்தை விநியோகித்தல் அல்லது முத்திரைகள் அல்லது பொருட்களை வழங்குதல் தொடர்பாக நிர்வாகப் பொறுப்பாக இருந்தாலும் அல்லது அத்தகைய அதிகாரத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அல்லது உத்தியோகத்தர், அரச கணக்கிற்கு உரிய உறுதிச்சீட்டுக்கள், சான்றுப்படுத்தும் காசோலைகளில் கையொப்பமிடுகின்றவர்களும் தமது கடமைகளை நேர்மையாகச் செய்வார்கள் என்று 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர் பிணை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் 21 பேருக்கான பிணை வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | பிணை வைத்தல் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளையும் முடிவுறத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சு மற்றும் அதற்குட்பட்ட சிறு வணிக அபிவிருத்தி பிரிவுகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இலக்குகள் நிறுவப்பட்டிருந்தது. விளையாட்டு அமைச்சில் இனங்காணப்பட்ட வெற்றி இலக்குகள் 02 இற்கான முன்னேற்றம் முறையே நூற்றுக்கு 59 வீதம் மற்றும் நூற்றுக்கு 50 வீதமும் ஆகும். சிறு வணிக அபிவிருத்தி பிரிவின் நிறுவப்பட்டிருந்த வெற்றி இலக்குகள் 02 இன் முன்னேற்றம் முறையே நூற்றுக்கு 57.9 மற்றும் நூற்றுக்கு 63.8 வீதமும் ஆகும். தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய மத்திய நிலையத்தின் நிறைபேறான நோக்கங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வெற்றிக்கான குறிகாட்டிகள் 03 மட்டுமே இனங்காணப்பட்டிருந்தது. அதன் முன்னேற்றம் நூற்றுக்கு 60 வீதத்திலிருந்து நூற்றுக்கு 70 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | Covid -19 தொற்றுநோய் காரணமாக நிலைமையின் கீழ் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்ட போது தடைகள் ஏற்பட்டமை, ஒப்பந்த மதியுரை நிறுவனத்தின் பிரச்சினை, மற்றும் நிறுவனங்கள் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் எழுந்த சிக்கல்கள் என்பன முன்னேற்றம் குறைவடைந்தமைக்கான காரணங்களாகும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் அதற்கு உரித்தான சிறு வணிக அபிவிருத்திப் பிரிவு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி மத்திய நிலையத்தின் | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | கடமையின் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு பதவியணியை ஆட்சேர்ப்பதற்கு |

சிரேஷ்ட மட்டத்தில் 10 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 35 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 77 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 85 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 207 ஆகக் காணப்பட்டது. அவ்வெற்றிடங்கள் அமைச்சின் செயற்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதான நிதி அதிகாரி, பொறியியலாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று பணிப்பாளர் பதவிகள் 04 உம் முகாமைத்துவ சேவை அதிகாரிகள் 50 உம் மற்றும் 19 சாரதிகள் உள்ளடங்கலாக ஊழியர் பற்றாக்குறை காணப்பட்டது.

நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.